## 3. IAY

### 3.4 2004-05 – கான்கிரீட் மேற்கூரைச் செலவினத்தை ரூ. 9,000/– ஆக குறைத்தல்

ஊரக வளர்ச்சி (மதி 1) துறை

அரசாணை (நிலை) எண். 181 நாள் : 16.12.2004.

படிக்க :

1. மத்திய அரசு நே.மு.க எண்.11011/13/96– ஆர்.எச். நாள்.12.08.2004.
2. ஊரக வளர்ச்சித்துறை இயக்குநரின் கடித எண். 55710/2004, திட்டம் –1.1 நாள்.02.07.2004

**ஆணை**

படிக்கப்பட்ட ஒன்றில் உள்ள கடிதத்தில் மத்திய அரசு, இந்திரா நினைவு குடியிருப்புக்கான திருத்திய வழிகாட்டி நெறிமுறைகளை மாநில அரசுக்கு அனுப்பியுள்ளது. இத்திருத்திய வழிகாட்டி நெறிமுறைகள் 01.04.2004 முதல் அமலுக்கு வருகிறது. இத்திருத்திய வழிகாட்டி நெறிமுறைகளின்படி, ஒரு வீட்டிற்கான மதிப்பீடு 01.04.2004 முதல் சாதாரண தரையில் ரூ.25,000/– எனவும் கடின தரையில் ரூ.27,500/– எனவும் கச்சா வீடுகளை மேம்படுத்துவதற்கான மதிப்பீடு ரூ.12,500/– எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி மத்திய மற்றும் மாநில அரசால் 75:25 என்னும் விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இத்திருத்திய வழிகாட்டி நெறிமுறைகளின்படி கான்கிரீட் மேற்கூரைக்கான மாநில அரசின் கூடுதல் செலவினமான ரூ.12,000/–ஐயும் சேர்த்தால் ஒரு வீட்டிற்கான மொத்த மதிப்பீடு சாதாரண தரையில் ரூ.37,000/– எனவும் கடின தரையில் ரூ.39,500/– எனவும் வழங்க வேண்டும். திருத்திய வழிகாட்டி நெறிமுறைகளின்படி கச்சா வீடுகளை மேம்படுத்த மத்திய அரசு ரூ.9375/– ம் மாநில அரசு ரூ.3125/–ம் வழங்க வேண்டும்.

2. இத்திட்டத்திற்கான மேற்கூரைச் செலவினத்தை மாநில அரசே ஒதுக்குவதால் இச்செலவினத்தைத் திருத்தியமைப்பது குறித்து அரசு கவனமாக ஆய்வு செய்தது. அதன்படி, ஒரு வீட்டிற்கான மதிப்பீடு சாதாரண தரையில் ரூ.25,000/–மும் கடின தரையில் ரூ.27,500/–மும் மத்திய அரசால் 01.04.2004 முதல் நிர்ணயிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாநில அரசின் மேற்கூரைச் செலவினத்தை ரூ.12,000/–லிருந்து ரூ.9000/– என திருத்தி வழங்கி ஒரு வீட்டிற்கான மொத்த மதிப்பீடு சாதாரண தரையில் ரூ.34,000/– எனவும் கடின தரையில் ரூ.36,500/– எனவும் நிர்ணயித்து கீழ்க்கண்ட் விகிதத்தில் வழங்க அரசு ஆணையிடுகிறது.

**சாதாரண தரையில்**

| | | |
|---|---|---|
| ஒரு வீட்டிற்கான மொத்த மதிப்பீடு | – | ரூ.34,000/– |
| மத்திய அரசின் பங்கு | – | ரூ.18,750/– |
| மாநில அரசின் பங்கு | – | ரூ. 6,250/– |
| மேற்கூரைக்கான மாநில அரசின் கூடுதல் நிதி | – | ரூ. 9,000/– |
| மொத்தம் | – | ரூ.34,000/– |

**கடின தரையில்**

| | | |
|---|---|---|
| ஒரு வீட்டிற்கான மொத்த மதிப்பீடு | – | ரூ.36,500/– |
| மத்திய அரசின் பங்கு | – | ரூ.20,625/– |
| மாநில அரசின் பங்கு | – | ரூ. 6,875/– |
| மேற்கூரைக்கான மாநில அரசின் கூடுதல் நிதி | – | ரூ. 9,000/– |
| மொத்தம் | – | ரூ.36,500/– |

**கச்சா வீடுகள் மேம்படுத்துதல்**

| | | |
|---|---|---|
| மத்திய அரசின் பங்கு | – | ரூ.9,375/– |
| மாநில அரசின் பங்கு | – | ரூ.3,125/– |
| மொத்தம் | – | ரூ.12,500/– |

3. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.277/JS (Per) /2004, நாள்.16.12.2004–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சாந்தா ஷீலா நாயர்**
அரசு செயலாளர்